JAFFNA

# ராஜீவுடன் டிக்ஸிற் ஆலோசனை

Registered as a Newspaper in SriLanka. விலை ரூபா ஒன்று

ஈழமுரசு

முரசு 3 19-8-86 செவ்வாய் (ஆவணி 3 துல்ஹஜ 12) முழக்கம் 196

## கொழும்பு பேச்சு நிலைபற்றி

இலங்கைக்கான இந்தியத் தூதுவர் திரு. ஜே. என். டிக்ஸிற் இனப்பிரச்சினை பேச்சுவார்த்தை தொடர்பாக இந்தியப் பிரதமர் திரு. ராஜீவ் காந்தியுடன் நேற்று ஆலோசனை நடத்தினார். கொழும்பில் இப்பொழுது நடைபெற்றுவரும் அரச, கூட்டணி பேச்சுவார்த்தைகளில் ஏற்பட்டுள்ள முன்னேற்றம் பற்றி திரு. டிக்ஸிற் இந்தியப் பிரதமரிடம் இச்சந்திப்பின் போது எடுத்துக் கூறியதாகத் தெரிவிக்கப்படுகிறது. இதேவேளையில் தமிழ்ப் போராளிகள் அமைப்புக்களின் தலைவர்களும் இந்திய அதிகாரிகளுடன் நேற்று பேச்சுவார்த்தை நடத்தியதாக தெரியவந்துள்ளது. மாகாணசபை யோசனை தொடர்பாக தமிழர் விடுதலைக் கூட்டணித் தூதுக்குழு இன்று தேசிய பந்தோபஸ்து அமைச்சர் திரு. லலித் அத்துலத் முதலியைச் சந்தித்து உரையாடவுள்ளது. நாளைய தினம் இவர்கள் வெளிவிவகார அமைச்சர் ஏ சி. எஸ் ஹமீத்தையும் சந்தித்து உரையாடுவார்கள். நாளைய மறுதினம் வியாழக்கிழமை ஜனாதிபதி குழுவினருடன் அவர்கள் மீண்டும் பேச்சுவார்த்தையை ஆரம்பிப்பார்கள்.

★ பேச்சுவார்த்தை வெற்றியளிக்குமானால்

# வடக்கின் புதிய முகாம்கள் உடனடியாக மூடப்படும்!

## ஜனாதிபதி உத்தரவாதம்

இனப்பிரச்சினைக்கு இருபகுதியினரும் ஏற்கும் அரசியல் தீர்வு காணப்படும் பட்சத்தில், வடக்கில் புதிதாக அமைக்கப்பட்ட சகல ராணுவ முகாம்களும் உடனடியாக மூடப்படும் என்று ஜனாதிபதி ஜெயவர்த்தன இந்திய உயர் அதிகாரிகளிடம கடந்த வாரம் உறுதியளித்ததாகத் தெரியவந்துள்ளது.

தற்போது கொழும்பில் கூட்டணியினருடன் நடத்திவரும் பேச்சுவார்த்தையின் போதும் ஜனாதிபதி இந்த உத்தரவாதத்தை அளித்ததாக பேச்சுவார்த்தைக்குழு வட்டாரங்கள் தெரிவித்தன.

ஆனாலும், புதிதாத அமைக்கப்பட்ட ராணுவ முகாம்கள் என்று எந்த முகாம்களை அரசாங்கம் கருதுகின்றது என்று தெளிவாகத் தெரியவில்லை எனவும் அதே வட்டாரங்கள் சுட்டிக் காட்டின.

பலாலி முகாம் தவிர மற்றைய சகல முகாம்களும், காரைநகர் கடற்படை முகாமும் கூட அகற்றப்பட வேண்டுமெனவும், பலாலிமுகாம் முன்னர் இருந்த அமைப்பிலேயே இருக்க வேண்டும் எனவும், விஸ்தரிப்பு வேலைகள் நிறுத்தப்பட்டு, மேலதிக ராணுவம் வெளியேற்றப்பட வேண்டுமெனவும் கூட்டணியினர் இந்திய அதிகாரிகளிடம் வலியுறுத்தியுள்ளதாகக் கூறப்படுகின்றது.

## போராளிகள் தலைவர்கள் 'ஜி.பி.' யுடன் நேற்றுபேசினர்

(புதுடில்லி)

இனப்பிரச்சினை தொடர்பாக இந்திய மத்திய அரசுடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்காக, விடுதலைப் புலிகளின் சார்பில் வே. பிரபாகரன், திலகர் ஆகியோரும், ஈரோஸ் இயக்கத்தின் சார்பில் இ. இரத்தினசபாபதி, வீ. பாலகுமார் ஆகியோரும், ரெலோ இயக்கத்தின் சார்பில் ஏ. செல்வம், ஸ்ரீ கந்தையா ஆகியோரும் நேற்று புதுடில்லி சென்றடைந்தார்கள். ஈ. பீ. ஆர். எல் எஃப். இயக்கத்தின் பிரதிநிதிகள் ஏற்கனவே புதுடில்லி சென்றிருந்தார்கள்.

இவர்கள் இந்திய அரசின் கொள்கைக் குழுத் தலைவர் திரு. ஜி. பார்த்தசாரதியை நேற்று சந்தித்துப் பேசினார்கள். இன்று இவர்கள் மற்றைய உயர் அதிகாரிகளையும் சந்தித்துப் பேசவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

### வல்வெட்டித்துறையில்

## ராணுவம் மறைந்திருந்து சுட்டதால் ஒருவர் மரணம்

(வல்வெட்டித்துறை)

வல்வை இராணுவ முகாம் முன்பாகவுள்ள மாடி வீடு ஒன்றிலும் குடி கொண்டுள்ள இராணுவத்தினர் அவ் வீட்டு மேல் கூரை ஓட்டை பிரித்து அதனை தமக்கு பாதுகாப்பு அரணாக்கிக் கொண்டு பதுங்கி நின்று தூரத்தேயுள்ள ரோட்டில் செல்லும் பொதுமக்களை சுடுகின்றனர். நேற்று முன்தினம் இராணுவத்தினரின் இம்மாதிரியான துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி வல்வெட்டித்துறையைச் சேர்ந்த முத்துலிங்கம் சுந்தரராஜன் (29) பலியானார். ஊரிக்காட்டைச் சேர்ந்த சின்னவன் (23) படுகாயத்துக்குள்ளானார்.

பலியான சுந்தரராஜனின் உடலை அவ்விடத்திலிருந்து எடுக்கவிடாது வல்வை இராணுவ முகாமிலிருந்தும் ஷெல்

—6ம் பக்கம் பார்க்க

### சம்பந்தன் தாயார் மரணம்

## கூட்டணி முக்கியஸ்தர் மூவர் திருமலைசென்று திரும்பினர்

(திருமலை)

தமிழர் விடுதலைக் கூட்டணியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களான திருவாளர்கள் இரா. சம்பந்தன், எஸ். சூசைதாஸன், வீ. யோகேஸ்வரன் ஆகியோர் பலத்த பாதுகாப்புடன் நேற்று திருமலைக்கு விஜயம்செய்து சில மணி நேரங்களிலேயே கொழும்பு திரும்பினார்கள்.

முன்னாள் திருமலை எம். பி. திரு. சம்பந்தனின் தாயாரின் மரணச் சடங்குகளில் கலந்து கொள்வதற்காகவே இவர்கள் மூவரும் இவ்விஜயத்தை மேற்கொண்டார்கள்.

—6ம் பக்கம் பார்க்க

## காவலூரில் ஹெலிகுண்டுவீச்சு; கடலிலிருந்துபீரங்கிதாக்குதல்!

(காவலூர்)

நேற்றுக்காலை அரச படையினர் ஹெலிகொப்டர் மூலம் காவலூர் பட்டணப் பகுதிகளை நோக்கி குண்டுகள் வீசி தாக்குதல் ஒன்றை மேற்கொண்டனர். இத்தாக்குதல் பல மணி நேரம் நீடித்தது.

அவர்கள் இவ்வாறு தாக்குதல் மேற்கொண்டிருக்க கடற்படையினர் காவலூரை நோக்கிபீரங்கித்தாக்குதலையும் மேற்கொண்டவண்ணம் இருந்தனர். இப்பீரங்கித் தாக்குதல் மாலைவரை நீடித்தவண்ணம் இருந்தது. நீண்டகால இடைவெளிக்குப்பின்னர் அரசபடையினர் இத்தாக்குதல்களை மேற்கொண்டனர்.

போராளிகளும் எதிர்தாக்குதல்களை நடாத்தினர். இச்சம்பவத்தினால் மக்கள் அச்சமடைந்து பாதுகாப்பிடம் தேடினர் தொடர்ந்தும் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டவண்ணம் இருந்ததனால் இதன் பாதிப்பை உடனடியாக அறிய முடியவில்லை. கடந்த வாரமும் ஆகாய ரோந்து சென்ற ஹெலிகொப்

—6ம் பக்கம் பார்க்க

### பொறியியலாளர் இறுதி பரீட்சை

## 14 தமிழ் மாணவர்களும் முதல் வகுப்பில் சித்தி!

பேராதனை பல்கலைக்கழகத்திலிருந்து இவ்வாண்டு இறுதிப் பரீட்சையில் சித்தியடைந்த இருபத்திரண்டு பொறியியலாளர்களில் பதினான்கு பேர் தமிழர்களாவர். இவர்களனைவரும் முதலாம் வகுப்பிற்சித்தியடைந்து சாதனையை நிலைநாட்டியுள்ளனர்.

சித்தியடைந்தோர் விபரம்:

சிவில் பொறியியலாளர்: கரவெட்டி கு. ஜெயதரன்,

—6ம் பக்கம் பார்க்க

## யாழ். ஆஸ்பத்திரியில் நேற்று பட்டப்பகலில் தாலிக் கொடி கொள்ளை!

யாழ். அரசினர் வைத்தியசாலைக்கு சிகிச்சைக்காகச் சென்ற பெண்மணி ஒருவரின் தாலிக்கொடி வெளிநோயாளர் பகுதியில் வைத்து அபகரித்துச் செல்லப்பட்ட சம்பவமொன்று நேற்று நடைபெற்றுள்ளது. குறித்த பெண்மணி

—6ம் பக்கம் பார்க்க

## கல்முனையில் மூவருக்கு மரண தண்டனை

கல்முனையில் அண்மையில் இடம்பெற்ற தமிழ்-முஸ்லிம் கலவரத்திற்குக் காரணமாக விருந்தவர்கள் என சந்தேகிக்கப்படும் மூவருக்கு நேற்று மரணதண்டனை வழங்கப்பட்டது. இவர்கள் மூவரும் மின்கம்பத்தில் கட்டப்பட்டு நேற்று மாலை ஐந்து மணியளவில் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

## வசாவிளான் முகாம் மூடுவிழா?

(சுன்னாகம்)

வசாவிளான் இராணுவ முகாமுக்குப் பலாலி முகாமிலிருந்து இராணுவ பிரத்தியேகப் பாதை ஊடாக கொண்டு செல்லப்பட்ட பாவனைப் பொருட்கள் திரும்பவும் பலாலி முகாமுக்கு எடுத்துச் செல்லப்படும் பணி ஆரம்பிக்கப்பட்டுள்ளது. வாகனங்கள் மூலமாக ஏற்றி இறக்கப்படும் வேலைகள் நடைபெறுகின்றன. செப்டம்பர்மாதம் முதல் வாரத்தில் பாடசாலை தொடங்குவதற்கு வசதியாக முகாம் மூடப்படுமெனக் கூறப்படுகிறது.

## சிப்பாய் ஒருவர் பலி

யாழ். கோட்டை ராணுவ முகாமிலுள்ள படையினருக்கும் போராளிகளுக்கும் இடையே நேற்று முன்தினம் இடம்பெற்ற துப்பாக்கிச் சமரில் ராணுவச் சிப்பாய் ஒருவர் கொல்லப்பட்டுள்ளதாக அரசாங்கம் அறிவித்துள்ளது.

## இது இப்போது தினசரி நிகழ்வு

(சுன்னாகம்)

பலாலி முகாமிலிருந்து கீரிமலைவரை இராணுவத்தினர் நடைபவனியை மேற்கொள்வது தினமும் நடைபெறும் நிகழ்வாகிவிட்டது. வாகனங்கள் சகிதம் தொண்டமானாறு கீரிமலை வீதிவழியே அவர்கள் நடந்து செல்லும்போது எதிர்ப்படும் பொதுமக்களுக்கு எதுவித பாதிப்புமேற்படுவதில்லையெனக்கூறப்படுகிறது. படையினர் போராட்டக் குழுக்களினால் ஒட்டப்படும் சுவரொட்டிகளையும் தாங்களாகவே அகற்றிச்செல்கின்றனர்.

## மினி சினிமாக்கள் ஈ.பி.ஆர்.எல்.எப். கண்காணிப்பில்

யாழ். குடாநாட்டின் பல பகுதிகளிலுமுள்ள மினி சினிமாக்கள் இனிமேல் தமது கண்காணிப்பின் கீழ் செயற்படுமென ஈ. பி. ஆர். எல். எப். அறிவித்துள்ளது.

இது பற்றி ஆராய யாழ். குடாநாட்டிலுள்ள அனைத்து மினி சினிமா உரிமையாளர்களும் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை காலை ஒன்பதரை மணிக்கு யாழ்நகரில் நடை

—6ம் பக்கம் பார்க்க

## பிரயாண ஒழுங்குகள்

★ கனடா
★ டென்மார்க்
★ ஜேர்மனி
★ சவூதி அரேபியா

நாம் மீண்டும் டென்மார்க் பயணங்களை ஆரம்பித்துள்ளோம்

- கனடா செல்ல விரும்புவோரை எதுவித இடையூறுகளுமின்றி எமது முகவர் நேரடியாக அழைத்துச் செல்வார்.
- டென்மார்க் செல்ல விரும்புவோரை வாரா வாரம் எமது முகவர் நேரடியாகக் கூட்டிச் செல்வார். வியாழக்கிழமை செல்லவிருக்கும் பிரயாணக் கண்டாயத்தில் சேரவிரும்புவோர் 21-08-86 க்கு முன் தொடர்பு கொள்ளவும்.
- ஜேர்மன் செல்வதற்கு உங்களுக்கு பயண ஒழுங்குகள் மிக விரைவில் செய்து தரப்படும்.
- சவூதி அரேபியாவுக்கு வீதி திருத்தும் வேலைக்கும், விவசாயத் தொழிலாளர்களுக்கும், மேசன், தச்சுத் தொழிலாளர்கள் பதவிக்கும் செல்ல விரும்புவோர் உடன் பாஸ்போட், 6 புகைப்படங்களுடன் நேரடியாகத் தொடர்புகொள்ளவும். பாஸ்போட், பொண்ட் ஆகியவையும் ஒழுங்குசெய்து தரப்படும்.

பி. குறிப்பு:
பஸ் வழி இல;-
764, பலாலி வீதி,
கோண்டாவில். R/25304

**N. BALA**
திருச்செல்வம் வீதி,
கோண்டாவில் கிழக்கு,
கோண்டாவில்.



## PACIFIC OCEAN ISLANDS INFOFISH APPLICATION

Application forms for registration at INFOFISH for PACIFIC OCEAN ISALANDS After the registration INFOFISH will Contact you further particulars. Fishery Technician for boat and troler engine repairers and boat makers for fishing. Vacancies for coxwain and crews. Please contact me on *1986-08-19th* and *1986-08-20th* with passport size photo hand written bio-data in duplicate with the detail information above your free time Activities Heavy density of English knowledge required.

**T. Rajeswaran**
30/30, Arulampalam Lane,
Ariyalai, JAFFNA.
(V) B/1471



## பிரயாண ஒழுங்குகள்

### டென்மார்க், கனடா, லண்டன்

எமது முகவர் குறுகிய காலத்துக்குள் அழைத்துச் செல்கிறூர், மத்தியகிழக்கிற்கு.

தச்சுத்தொழில், மேசன், ஓட்டோ எலற்ரிஷியன், A. C. டெக்னீஷியன், பிளம்பர், ஹாபர் கிளீனர்ஸ், பிளாஸ்ரிக் கொம்பனி, ஆகியவற்றிற்கு இரண்டு வாரத்துக்குள் பிரயாண ஒழுங்கு மேற்கொள்ளப்படுகிறது. 20ந் திகதிக்கு முன் தொடர்பு கொள்ளவும்.

குறிப்பு:- முன்பு என்னுடன் மத்தியகிழக்கு நாடுகளுக்குச் செல்வதற்கு தொடர்பு கொண்டவர்கள் உடன் தொடர்பு கொள்ளவும் பிரயாண ஒழுங்குகள் பூர்த்தியாக்கப்பட்டுள்ளன.

தொடர்பு கொள்ளும் முகவரி:

**N. சிவஞானம்**
மகாவித்தியாலய அருகாமை,
ஏழாலை மேற்கு,
ஏழாலை,
பஸ் இலக்கம் 770

R/25310



### சட்டத்தரணிகளற்ற
## பிரசித்த நொத்தாரிசுகளுக்கு

அண்மையில் காணி உறுதி எழுதுவது சம்பந்தமாக அனுப்பி வைக்கப்பட்டுள்ள கடிதம் தொடர்பாக ஆராய்வதற்கான கூட்டம் (20/8/86) புதன்கிழமையன்று யாழ்ப்பாணம் ஞானம்ஸ் ஹோட்டலில் காலை 11 மணிக்கு நடைபெறவுள்ளது.

இங்ஙனம்
நேசன்,
அத்தியடி,
யாழ்ப்பாணம்.

R/25306



நம்பிக்கை! நாணயம்!! பாதுகாப்பு!!!

# நல்லூர் உற்சவ வட்டிச் சலுகை

10-8-1986 தொடக்கம் 10-9-1986 வரை

மாதாந்தம் 20 ./. வட்டியுடனும்
கூடுதலாக 4 ./. போனசுடனும்
மொத்தமாக 24 ./. வட்டி பெற

இன்றே முதலீடு செய்யுங்கள்

# யாழ்-தமிழர் நிதியம்

140, நாவலா வீதி, (மனோகரா சினிமா அருகாமை) யாழ்ப்பாணம்.


## விளம்பரம்


Electical Engineering. (London Exam.) PART I & PART II. Start on: 20-8-86. JAFFNA TECHNICAL INSTITUTE, 52/1, Stanly Road, Jaffna R/25313



### திட்டப்பரிசு

இம் மாதத்துக்குரிய அதிர்ஷ்டசாலியை இம்மாதம் 25-ம் திகதி பிற்பகல் 5 மணியளவில் அங்கத்துவ நண்பர்களை வந்து தெரிவு செய்யுமாறு அழைக்கின்றோம். நிலுவைகள் இருப்பின் நேரடியாக வந்து ஆவன செய்யுங்கள். தவறினல் வெற்றி பெருவிலும் கட்டிய தொகை மட்டுமே திருப்பித் தரப்பெறும். சேராதவர்கள் உடனடியாகச் சேரலாம். மேலும் விபரங்களுக்கு: லக்கி பெனிபிட் கோ. லிமிட்டட், பொதுச் சந்தை, கோப்பாய். R/25311


### காணவில்லை

மாசிலாமணி சந்தனம் என்ற பெயரையுடைய அடையாள அட்டையும் சாரதி லைசென்சும் கிளிநொச்சியில் வைத்து காணுமல் போய்விட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுடன் கிளிநொச்சி காந்தி நிலையத்திலுள்ள சர்வோதயம் காரியாலயத்தில் ஒப்படைக்கவும்.
B/1470


### சேவை

உங்களுக்குத் தேவையான தெளிவான போட்டோஸ்ரெட் பிரதிகளுக்கும் ரோனியோப் பிரதிகளுக்கும் தமிழ், ஆங்கில ரைப்பிங் வேலைகளுக்கும் கிளீன் கட், 239, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். ரெலிபோன்: 22823 (B/1461)


## பிறந்தநாள் வாழ்த்து

❈ பாரதி வீதி, சபாரத்தினம் சந்திராதேவி தம்பதியின் மகள் கிரிசாந்தினி இன்று தனது எட்டாவது பிறந்தநாளைக் கொண்டாடுகிறூர்.

❈ கரம்பன் மேற்கு, ராஜன் கலா தம்பதியின் மகள் சங்கீதா இன்று தனது ஐந்தாவது பிறந்த தினத்தைக் கொண்டாடுகிறூர்.

❈ அரியாலை, மகேந்திரராசா கிருஷ்ணமனோரதி தம்பதியின் மகள் தர்சனு இன்று தனது முதலாவது பிறந்தநாளைக் கொண்டாடுகிறூர்.

## குடிநீர் வசதி

(வேலணை)

நயினதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன ஆலய வருடாந்த மகோற்சவத்தை முன்னிட்டு இங்கு வருகை தரும் பக்தர்களுக்கு வேலணை அராலித் துறையிலும், குறிகாட்டுவான் துறையிலும் அந்தந்தப் பகுதி அபிவிருத்திச் சபை உப அலுவலகங்களினல் குடிநீர் வசதிகள் செய்து கொடுக்கப்பட்டுள்ளது.

அதிக வெப்பம் நிலவும் இக்காலத்தில் இக்குடிநீர் வசதி யாத்திரிகர்களுக்கு மிகவும் நன்மை பயக்கும் செயலாகும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

## விளையாட்டுச் சங்கம்

(நயினதீவு)

புங்குடுதீவில் உள்ள அனைத்து விளையாட்டுக் கழகங்களையும் ஒன்றிணைத்து விளையாட்டுச் சங்கம் ஒன்றை அண்மையில் வேலணை உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்கான விளையாட்டு அலுவலர் திரு. கே. பீலிக்ஸ் ஸ்தாபித்தார்.

அருட்திரு. கோவிந்தராஜ் அடிகளார் வேதனை

# பகுத்தறிவு மறந்து, கொடுமை மிகுந்து வாழும் மனிதனால் சமுதாயம் கெடுகிறது

(நல்லூர்)

"இறைவன் மனிதனைத் தனது சாயலாகப் படைத்தார். அவன் நன்மையையும், தீமையையும் அறிந்துவாழ வேண்டுமென்று இறைவன் விரும்புகிறார். படைப்பிலே நிறைவுள்ளவர்களாகவும், சாயலிலே இறைவனைப் போலவும் இருக்கவேண்டிய அவன் அதற்கு மாறுபட்டவனாக வாழுகின்ற நிலையில் தனது வாழ்க்கையை அமைத்துக் கொண்டான். தனது சித்தத்தை நிறைவேற்றாமல் இருக்கும் எம்மைப் பார்த்து இறைவன் கவலையடைகிறார்"

இவ்வாறு நல்லூர்பரி.யாக் கோபு ஆலயத்தில் நடைபெற்ற பரியாக்கோபு தினத்தையொட்டிய மூன்றுநாள் எழுப்புதல் கூட்டத்தில் அருட்திரு. கே. பி கோவிந்தராஜ் அடிகளார், அருளுரை நிகழ்த்துகையில் குறிப்பிட்டார்.

பாடகர்களின் எழுப்புதல் கீதங்களுடன் ஆரம்பமாகிய ஆராதனையில் அடிகளார் தொடர்ந்து அருளுரை நிகழ்த்துகையில், "தனது சாயலாக மனிதனைப் படைத்த ஆண்டவன் உலகில் சகலவற்றையும் படைத்து அவனை ஆளுகை செய்ய நியமித்தான். ஆளுகை செய்யவேண்டிய திறமையுடைய மனிதன் இன்று மற்றவனை அடக்கி, அவனது உரிமைகளைப் பறித்து அவனை அடிமைபோல நடத்த முற்படுகிறான். உழைத்து வாழவேண்டிய உத்தரவாதமுடைய மனிதன் இன்று தான் உழைக்காமல் உழைப்பவனைச் சுரண்டி வாழுகின்ற நிலைமைக்குத் தள்ளப்பட்டுள்ளான்.

நல்லதைச் செய்யவேண்டிய மனிதன் இன்று தீயதையே பெருமளவில் செய்கிறான். சமாதானம் என்று வாய்மட்டில் பேசும் மனிதன் மனித இனத்தையே பூண்டோடு அழிக்கக்கூடிய அணுகுண்டுகளையும், பயங்கர ஆயுதங்களையும் செய்து குவிக்கிறான். எந்த நேரமும் போருக்கான முஸ்தீபுக்களையே செய்கிறான். ஆளுகையில் உயிரிழப்பையும், இரத்தம் சிந்துதலையுமே தனது முதற்கடமையாகக் கொள்ளுகிறான். இனங்களுக்கிடையே ஐக்கியமும், ஒருமைப்பாடும் இருக்கவேண்டுமென்று இறைவன் விரும்புகிறான்.

ஆனால் மனிதனோ ஒருவரை ஒருவர் நிறத்தாலும், இனத்தாலும், மொழியாலும், கூறுபோட்டு எதேச்சாதிகாரமாக ஆளப்பார்க்கிறான். மற்றவனுடைய உரிமைகளை மறுக்கிறான். உரிமைகள் மறுக்கப்பட்ட மனிதன் கைகட்டி, வாய்பொத்தி வாழவேண்டிய நிர்ப்பந்தமான நிலைக்குத் தள்ளப்படுகிறான். தன்னால் படைக்கப்பட்ட மனிதன் இவ்வுலகில் சந்தோஷமாக வாழவேண்டுமென்று இறைவன் நல்ல சூழலில் உலகைப் படைத்தார். இயற்கையாக செடிகொடிகளையும், காட்டு மரங்களையும், மலைகளையும், ஆறுகளையும் இயற்கை வனப்பையும் படைத்தார்.

ஆனால் இன்று மனிதன் இவைகளைப் பெருமளவில் அழித்து தனது தேவைகளுக்குப் பயன்படுத்துகிறான். சுற்றாடலே பழுதடைந்த நிலைக்கு வந்துவிட்டது நாம் சுத்தமான காற்றையே சுவாசிக்க முடியாத அவல நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளோம்.

யாழ்ப்பாண ஆர்ச் டீக்கன் அருட்திரு சாம். டி. ஹோர்சிங்டன் அடிகளார் ஆராதனையை ஒப்புக்கொடுத்தார்.


உ

## நல்லூர்க் கந்தசுவாமி கோயில்

திருவிழாவை முன்னிட்டு

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் சபை வழங்கும்

### தெய்வீகத் தமிழிசை நிகழ்ச்சிகள்

கீழே தரப்பட்டுள்ள நிரலின்படி ஆலய வீதி அருகமைந்த நாவலர் மணி மண்டப வளவில் தினமும் மாலை 6.30 மணி தொடக்கம் 8-30 மணி வரை நடைபெறும்.

நிகழ்ச்சித் தினங்களும் பாடகர்களும்

19-8-86 செவ்வாய்க் கிழமை – மஞ்சம்
பண்ணிசைச்செல்வர்
வே. சிவஞானம்

26-8-86 செவ்வாய்க்கிழமை – திருக்கார்த்திகை
சங்கீத வித்துவான்
திருமதி நாகேஸ்வரி பிரம்மானந்தா

29-8-86 வெள்ளிக்கிழமை – கைலாசவாகனம்
சங்கீத வித்துவாம்ஷினி
திருமதி லக்ஷ்மிதேவி பாலகிட்ணர்

30-8-86 சனிக்கிழமை – வேல் விமானம்
சங்கீதபூஷணம்
எஸ். கணபதிப்பிள்ளை

31-8-86 ஞாயிற்றுக்கிழமை – மாம்பழத் திருவிழா
சங்கீத வித்துவான்
பரம் தில்லைராஜா

1-9-86 திங்கட்கிழமை – சப்பரம்
சங்கீத பூஷணம்
எஸ். பத்மலிங்கம்

2-9-86 செவ்வாய்க்கிழமை – தேர்
சங்கீத பூஷணம்
ஐ. வேலாயுதபிள்ளை

3-9-86 புதன்கிழமை – தீர்த்தம்
சங்கீத பூஷணம்
செல்வி யோகாம்பிகை செல்லையாபிள்ளை
சங்கீத பூஷணம்
செல்வி நா மீமாட்கதிர்காமர்

4-9-86 வியாழக்கிழமை – பூங்காவனம்
சங்கீத பூஷணம்
பொன் சுந்தரலிங்கம்.

அணிசெய் இசை வழங்கும் கலைஞர்கள்

வயலின்: சங்கீத பூஷணம் வி. கே. குமாரசாமி
சங்கீத பூஷணம் ஆர். இராதாகிருஷ்ணன்
சங்கீத வித்துவான் செல்வி பாக்கியலக்ஷ்மி நடராசா
சங்கீத வித்துவான் திருமதி ஞானம்பிகை பத்மசிகாமணி

மிருதங்கம்: சங்கீதரத்தினம் எஸ். மகேந்திரன்
சங்கீத ரத்தினம் எம். சிதம்பரநாதன்

முகர்சிங்: வித்துவான் எஸ். இராஜா

கடம்: வித்துவான் எஸ். துரைராஜா

தம்புரா: வித்துவான் ஐ. வயிரவநாதன்

இறைபுகழ் இன்னிசை கேட்டு இன்புற
அறுமுகவன் அடியவர் அனைவரும் வருக!

நிகழ்ச்சி ஒழுங்கு

ரெலி குளோப்

ரெலிபோன் சேவையாளர்
ஆர். ஜி. கட்டடம், ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
ரெலிபோன்: 25088 பத்து சமாந்தரத் தொடர்புகள்.

B/1469


# சட்டவிரோத மின் வயர்கள் சந்தியில் எரிக்கப்பட்டன

(வயாவிளான்)

அச்சுவேலி பஸ் நிலையத்துக்கு அண்மையில் வைத்து சட்டவிரோத மின் பாவனையாளர்களின் மின் வயர்கள் கொளுத்தி எரிக்கப் பட்டன.

அச்சுவேலி மாவட்ட அபிவிருத்திச் சபையின் உப அலுவலக எல்லைப் பரப்பில் மின் அத்தியட்சகரின் தலைமையில் மின்சாரப் பகுதி ஊழியர்களும். இளைஞர் அமைப்பொன்றின் பிரதிநிதிகளுமாக சட்ட விரோத மின்னிணைப்புக்களைத் தேடித் துண்டித்தனர்.

மின்னிணைப்பினைத் துண்டித்தது மட்டுமின்றி, தொடர்ந்தும் சட்டவிரோத மின் பாவனையில் ஈடுபடுபவர்கள் மிகக் கடுமையாகத் தண்டிக்கப்படவுள்ளதாகவும் எச்சரிக்கப்பட்டனர்.

சட்டவிரோத மின்பாவனைக்குப் பயன் படுத்தப்பட்ட பெரும் குவியல் எரிக்கப்பட்டதனால் பஸ் நிலையம் புகை மண்டலமாகக் காட்சியளித்தது.

தகுந்த நேரத்தில் முன்னெச்சரிக்கையாக எடுக்கப் பட்ட இந்நடவடிக்கையினால் வெடிக்கவிருந்த ட்ரான்ஸ்போமர் காப்பாற்றப் பட்டுள்ளதாக மின் அத்தியட்சகர் தெரிவித்தார்.

# பாலர் பாடசாலைகளினது கல்வித் திறன் உயரவேண்டும்

"பாலர் பாடசாலைகளில் கல்வித்திறன் உயரவேண்டும். தற்பொழுது சின்னக்குழந்தைகள் அரச பாடசாலைகளுக்குப் போகுமுன் பாடசாலை முன் கல்வியாக பாலர்பாடசாலைகளுக்கே செல்லுகின்றனர் அங்கு அன்பு, கட்டுப்பாடு ஆடல் பாடலுடனான கல்வியைப் பெற்றுக்கொள்ள வசதி வேண்டும், அதற்கு பாலர் பாடசாலை ஆசிரியைகள் மிக்க பொறுப்புணர்ச்சியுடன் செயற்படவேண்டும்" என யாழ். கல்விப் பணிப்பாளர் திரு. இரா. சுந்தரலிங்கம் கூறினார்.

கோப்பாய் வட்டாரக் கல்வி மூலவள நிலையமும், யாழ். கல்வித் திணைக்கள வளர்ந்தோர் கல்விப் பிரிவும் இணைந்து நடாத்தும் பாலர் பாடசாலை ஆசிரியப் பயிற்சி நெறியை புத்தூர் கல்வி மூலவள நிலைய விரிவுரை மண்டபத்தில் அங்குரார்ப்பணம் செய்து வைத்துப் பேசிய திரு. சுந்தரலிங்கம் மேலும் பேசுகையில், "கல்வி அமைச்சுக்கூட நினைத்துப் பார்க்காத ஒன்றை நடத்துவதற்கு முன்வந்த கோப்பாய் வட்டாரக் கல்வி மூலவள நிலையத்தை உண்மையில் பாராட்டாமல் இருக்க முடியாது. இந்நிலையத்தில் மாதிரி பாலர் பாடசாலை ஒன்றை அமைப்பதற்கு கூடிய விரைவில் கட்டடம் அமைத்து தருவேன். அத்தோடு இந்நிலையம் பண்ணிசை வகுப்புக்களையும், பால பண்டிதர் வகுப்புக்களையும் நடாத்துவதற்கும் ஒழுங்குகள் மேற்கொண்டுள்ளேன். இங்கு நூற்றுக்கு மேற்பட்ட யுவதிகள் எதிர்கால ஒளி விளக்குகள் வந்திருக்கிறார்கள். பயிற்சி பெறுவதற்கு இவர்களில் யாருக்காவது போக்குவரத்துக்கு உண்மையிலே வறுமை காரணமாக கஷ்டமிருந்தால், என் சொந்தப் பணத்தில் கட்டாயம் உதவிசெய்வேன்" என உணர்ச்சிவசப்பட உரையாற்றினார்.

இந் நிகழ்ச்சிக்குத் தலைமை தாங்கிய கோப்பாய் கல்வி அதிகாரி திரு. ஆ. த. தங்கராசா பேசுகையில "யாழ். மாவட்டத்திலேயே இக் கல்வி மூலவள நிலையம் முன் மாதிரியாக பல அரிய பயிற்சிகளையும், சுய தொழில் வாய்ப்புப் பயிற்சிகளையும் நடாத்துவது பெருமைக்குரியதாகும். இதற்காக இந் நிலையப் பொறுப்பதிகாரி திரு. எஸ். சி. எஸ். சிதம்பரநாதனின் முயற்சிகளைப் பாராட்டுகிறேன் பாலர் பாடசாலைகளில் பயிற்சி பெற்ற ஆசிரியைகள் கற்பிக்க வேண்டும் என்பதற்காகவே இப் பயிற்சி நெறி ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இன்றைய காலகட்டத்தில் எமது தேவைகளை நாமே பூர்த்தி செய்ய வேண்டும்" எனக் கூறினார்.

இவ்வைபவத்திற்கு சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்ட யாழ் பல்கலைக்கழக கல்விப் பகுதி சிரேட்ட விரிவுரையாளர் திரு. கே. சின்னத்தம்பி, பண்டிதர் எஸ். சுப்பிரமணியம் ஆகியோரும் உரையாற்றினர். பொறுப்பதிகாரி திரு. எஸ். சி. எஸ். சிதம்பரநாதன் வரவேற்புரை வழங்கினார்.

# கிராமங்களில் சிறப்பான செயற்பாடுகள் தேவை

(கரவெட்டி)

"இன்று எம்மினம் இழந்த உரிமைகளுக்காகப் போர் தொடுத்து வருகின்றது. இவ்வேளை நாம் ஒவ்வொருவரும் நல்ல செயற்பாடுகளைச் செய்தல் வேண்டும். இவ்விதத்தில் 'அபிவிருத்திப் பணியில் இளைஞர்' என்ற விடயம் சம்பந்தமான இந்த இருநாள் கருத்தரங்குகள் பயனுள்ளதாக அமைந்திருக்கும் என்பதில் சந்தேகமில்லை. இக்கருத்தரங்கில் பெற்றுக்கொண்ட விடயங்களை ஒவ்வொரு கிராமத்திற்கும் தெரியப்படுத்தி கிராமங்கள் தோறும் அபிவிருத்தித் திட்டங்கள் செய்தல் வேண்டும்."

இவ்வாறு தேவரையாளி இந்துக் கல்லூரியில் நடைபெற்ற கருத்தரங்கில் தேர்ச்சி பெற்ற மாணவர்களுக்கு சான்றிதழ் வழங்கும் வைபவத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய அறவழிப் போராட்டக் குழுவின் தலைவர் திரு. வி. எஸ். துரைராசா கூறினார்.

இவ்வைபவத்திற்கு வதிரி தமிழ் மன்ற இளைஞர் கழகத்தின் தலைவி செல்வி எஸ். சூரியகலா தலைமை வகித்தார்.

திரு. துரைராசா தொடர்ந்து பேசுகையில், '1947 ஆம் ஆண்டு இந்தியா சுதந்திரமடைவதற்கு முன் மகாத்மா காந்தியால் ஆதாரக் கல்வி அறிமுகம் செய்யப்பட்டது யாவரும் அறிந்த விடயமே. அந்த ஆதாரக் கல்வியில் தொழிற்கல்விதான் முக்கியத்துவம் பெறுகின்றது. எனவே நாமும் அந்த தொழிற் கல்வியை சிறந்த முறையில் பெற்று எமது நாட்டு பொருளாதார அபிவிருத்திக்கு உதவ வேண்டும்' என்றார்.

கருத்தரங்கில் பங்குகொண்ட இளைஞர், யுவதிகளுக்கு அறவழிப் போராட்டக் குழு செயலாளரால் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

திரு. வி. சுவாமிநாதன் திட்டமிடல் பணிப்பாளர் கிளிநொச்சி, செல்வன் தாஸ் வேறும் பல பாராட்டுரை நிகழ்த்தினர். திரு. சி.குமாதாசன் நன்றி தெரிவித்தார்


உ

முருகா

## நல்லூர் கந்தசுவாமி கோயில் மஹோற்சவம் - 1986

இன்று 10-ம் திருவிழா (மஞ்சம்)



B/1449

மஞ்சத்தில் ஏறி வருவான் வடிவேலன்
நெஞ்சத் தமர்ந்து நிறைகின்றான்- செஞ்சொற்
புனைமாலை சாத்திப் புகழ்பாடும் அன்பர்
இனம்வாழ வேலொன் றெந்து!

— சோ. ப.

எந்தை கந்தவேளைப் பிரார்த்தித்துப் பிரசுரிப்பவர்கள் — 'ரெலிகுளோப்'

உதய சிந்தனை

முட்டாளுக்கு அறிவுரை வழங்குவது இறந்தவனுக்கு மருந்து கொடுப்பது போலாகும். —டால்ஸ்ராய்.

40, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் தொலைபேசி: 22437

## இதய ஒலி

19-8-86 செவ்வாய்க்கிழமை (அக்ஷய) ஆவணி 3

# ஹராரேயுக்கு செல்லாத உண்மைக் காரணங்கள்

ஹராரேயில் நடைபெறும் அணிசேரா நாடுகளின் தலைவர்கள் மாநாட்டுக்கான தனது விஜயத்தை ஜனாதிபதி ஜெயவர்த்தன ரத்துச் செய்துள்ளமை கடந்த வாரத்தின் முக்கிய செய்திகளில் ஒன்றாகும்.

செப்டம்பர் மாதம் முதலாம் திகதி முதல் ஐந்தாம் திகதி வரை ஸிம்பாம்வேயின் தலைநகரான ஹராரேயில் இம்மாநாடு நடைபெறவுள்ளது.

கொழும்பு வந்திருக்கும் கூட்டணித் தலைவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தவிருப்பதாகவும், பிரச்சினைக்குத் தீர்வு காண்பதில் அவர் அதிக அக்கறை காட்டுவதாலுமே ஹராரே விஜயத்தை மேற்கொள்ள முடியவில்லை என்று உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது.

தமிழர் பிரச்சினைக்கு விரைவான, அனைவரும் ஏற்கும் நல்லதொரு தீர்வைக் காண்பதில் ஜனாதிபதி அக்கறை காட்டுவாரானால் அதனையிட்டு மகிழ்ச்சியடைபவர்கள் தமிழர்களாகவே இருப்பார்கள்.

அரசாங்கத்தின் தீர்வு யோசனைகளுக்கு தென்னிலங்கையில் உருவாகிவரும் எதிர்ப்பு அலையும், "யார் எதிர்த்தாலும் எனது திட்டத்தைச் செயற்படுத்தியே தீருவேன்" என்ற ஜனாதிபதியின் கர்ச்சனையும் பெரிய களேபரமொன்றுக்குக் கட்டியம் கூறுபவையாகவே எமக்குத் தென்படுகின்றன.

தனது ஹராரே விஜயரத்துக்கு ஜனாதிபதி என்ன காரணத்தைச் சொன்னாலும், உண்மையான காரணம் தெற்கில் உருவாகிவரும் கொந்தளிப்பு நிலைமைதான் என்பது அரசியல் விமர்சகர்களின் கருத்தாகும்.

தெற்கில், அரசுக்கு எதிரான சகல சக்திகளும் ஒன்றிணைந்துள்ளன. பரவலான எதிர்ப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள இவர்கள் கங்கணம் கட்டிக்கொண்டு நிற்கின்றனர்.

தடைசெய்யப்பட்ட ரோகண விஜேவீராவின் ஜே. வி. பி. இயக்கம் மீண்டும் புத்துயிர் பெற்றுள்ளதாகவும், சுமார் பத்தாயிரம் முழுநேர உறுப்பினர்கள் இதில் சேர்ந்துள்ளதாகவும் இரகஸிய பொலிஸ் அறிக்கையொன்று தெரிவிக்கின்றது.

தெற்கில் அண்மையில் இடம்பெற்ற சில தாக்குதல்களை இவர்களே மேற்கொண்டதாகவும் பொலிஸ் புலன் விசாரணைகள் மூலம் தெரியவந்துள்ளது.

இது அரசாங்கம் எதிர்பார்த்திராத முதலாவது தலையிடி.

அரசாங்கத்தின் மாகாண சபை யோசனைக்கு எதிரான பிரசாரக் கூட்டங்கள் இவ்வாரம் தெற்கில் ஆரம்பமாகவுள்ளன.

அஸ்கிரிய பீடாதிபதி தலைமையில், திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா, திரு. அனுரா பண்டாரநாயக்கா ஆகியோர் சிறப்புரையாற்றும் "அரச எதிர்ப்பு அங்குரார்ப்பணக்" கூட்டம் நாளை மறுதினம் 21ம் திகதி நுகேகொடையில் நடைபெறவுள்ளது.

ஸ்ரீ ஜெயவர்த்தன புரவின் தலைநகரம் இது. சுமார் நாற்பதுக்கும் அதிகமான சிங்கள, பௌத்த அமைப்புக்கள் சேர்ந்து இதனை ஆரம்பித்துள்ளன.

அடுத்ததாக தனது கட்சிக்குள்ளே உருவாகிவரும் "நெருக்கடி"யும் கூட ஜனாதிபதிக்கு பெரும் பிரச்சினையைக் கொடுக்க ஆரம்பித்துள்ளது.

நிலைமையைச் சாதகமாக்கி 'இராணுவச்சதி' ஒன்று ஏற்படலாமென்றுகூட ஜனாதிபதி அச்சமடைந்துள்ளதாக ஸ்ரீலங்கா மக்கள் கட்சித் தலைவர் திரு. குமாரணதுங்கா அறிவித்துள்ளார்.

ஹராரேயுக்குத் தாம் சென்றிருக்கும் சமயத்தில் ஜே.வி.பி. தாக்குதல்கள், எதிர்பிரசார கூட்டங்கள், இராணுவச்சதி ஆகிய அனைத்தும் ஒன்றாக நடந்துவிட்டால் என்ற அச்சமே அதி உத்தம ஜனாதிபதி அவர்களை அங்கு செல்ல விடாது தடுத்திருக்கலாம்.

அது மட்டுமன்றி, இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தியை அங்கு சந்திக்கும் போது என்னத்தைக் கூறிச் சமாளிப்பது என்ற பிரச்சினை வேறு!

கடந்த மூன்றாண்டுகளாக பிரச்சினைக்குத் தீர்வுகாண முடியாத தமது 'கெட்டித்தனத்தை' எவ்வாறு மூடிமறைந்து உலகத் தலைவர்கள் முன்னால் முகம் கொடுப்பது என்ற பிரச்சினை வேறு!

இவைகளெல்லாம் சேர்ந்தே அவரை ஹராரேயுக்குச் செல்லாமல் செய்திருக்கலாம்!

'புரன்ட்லைன்' சஞ்சிகையின் ஆகஸ்ட் 9 - 22ம் திகதி இதழில் வெளியான கட்டுரையின் தமிழாக்கம்.

# வடக்கும் கிழக்கும் இணைந்ததே தமிழ் மொழி மாநிலம்; இதுவே ஈழத் தமிழர் தாயகம்

தமிழர் ஐக்கிய விடுதலைக் கூட்டணிக்கும் இலங்கை அரசாங்கத்திற்கும் இடையே கொழும்பில் முதல்கட்ட இணக்கக் கலந்துரையாடல்கள் அதிக தடை தடங்கல் எதுவும் இன்றி நடந்தேறின. இத்தீவிலுள்ள நீடித்த மனித இனப் பிணக்கிற்கு ஒரு முற்றுப்புள்ளி வைத்தலையிட்டு நிகழ்த்தப்பட்ட இச்சந்திப்பு 1986, ஜூலை மாதம் பதின்மூன்றும் திகதி ஆரம்பமாகி, பதினொரு நாட்களாக பண்டாரநாயக்க ஞாபகார்த்த அனைத்து நாட்டு மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது. இக்கட்டத்தில், பிணக்கு முடிந்துவிடும் என, சிறிதளவு நன்னம்பிக்கை நிலவுகிறது.

ஒத்திவைக்கப்பட்ட இவ்வுரையாடல்கள் 1986, ஒகஸ்ட் மாத நடுப்பகுதி வாக்கில் தொடர உள்ளன. அத்தருணம், த. ஐ. வி. கூட்டணியின் வசம் (ஒரு மசோதா) வரைவுச் சட்டமூலமொன்று கையளிக்கப்பட உத்தேசிக்கப்பட்டுள்ளது. இச் சட்டமூலம், மாகாண சபைகளின் உருவமைப்புப் பற்றியதாக இருக்கும்.

இப்பதினொரு நாட்களின் போதும் தலா இரண்டு மணித்தியாலங்கள் நீடித்த ஏழு சந்திப்புகள் நிகழ்ந்தன என்பது ஏதோ உண்மைதான். தமிழர் ஐக்கிய விடுதலைக் கூட்டணிக் குழுவின் தலைவராககூட்டணிச் செயலதிபர் அ. அமிர்தலிங்கமும், இலங்கை அரசின் சார்பில் ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனவும் இநத இணக்கப் பேச்சுக்களில் ஈடுபட்டிருந்தனர். சந்திப்புகள் இங்ஙனம் உயர்மட்டத்தினவாக இருந்துங் கூட, அச்சாணி முக்கியத்தும் வகித்து மத்திய வாத விடயமாக விளங்கிய தமிழ் மொழிப் பிராந்திய உருவாக்கம் இன்னமும் தீர்வுகாண்பதற்கு ஓர் அறைகூவலாகவே நிலைத்து நிற்கிறது.

'உச்ச முக்கியத்துவ வாத விடயங்களில் முதலாவது' எனப்படும் தமிழ் மொழிப் பிராந்தியம் குறிதது தமிழர் ஐக்கிய விடுதலைக் கூட்டணியானது அசைக்கவொண்ணுக்கடும் உறுதியான நிலைப்பாடு மேற்கொண்டுள்ளது. இலங்கையின் வடக்கிலும் கிழக்கிலுமுள்ள தமிழர் தாயகம் ஆட்சியதிகார உரித்தாக்கலின் பொருட்டு ஒரே கூறாகவே கணிக்கப்படுதல் வேண்டும் என்பது கூட்டணியின் வலியுறுத்தல். ஏனெனில் பிரச்சினைக்கு நடுநாயகமாக இடம் வகிக்கும் ஏனைய வாதவிடயங்கள் இன்னும் இரண்டு உள்ளன. சட்டமும் ஒழுங்கும் என்பது ஒன்று; மற்றது காணியும் காணிக் குடியமர்வும் என்பது. தமிழ்மொழிப் பிராந்தியம் எனும் முதலாவது விடயத்தினின்றும் இவையிரண்டும் தனிவேறு பிரிக்கவொண்ணுதன என கூட்டணியின் மனக் கண்ணிற் படுகிறது.

இதனையிட்டு கூட்டணியும் இலங்கை அரசும் முழுமூச்சாகப் பேரம் பேசிக்கொண்டு இருக்கையில், சட்டமும் ஒழுங்கும் எனும் விடயம் குறித்து 'நியாயமான ஓர் உடன்படிக்கை' சாத்தியமாகும் போலத் தெரிகிறது என்கிறார், கூட்டணித்தலைவர், எம். சிவசிதம்பரம். ஏனெனில், இணக்கப் பேச்சுக்களின்போது இவ்விடயம் தொடர்பில் சில சீர்திருத்தங்கள் செய்யப்பட்டன. இச்சீர்திருத்தங்களை உள்ளடக்கும், திருத்திய ஓர் ஆவணத்தை, கூட்டணியிடம் கையளிப்போம் என இலங்கை அரசதரப்பினர் வாக்குறுதி அளித்துள்ளனர், என்கின்றார் சிவசிதம்பரம்.

இவை தவிர, தமிழ் தலைவர்களுக்கும், காணி அபிவிருத்தி அமைச்சர், காமினி திசாநாயக்காவுக்குமிடையில் காணி எனும் வாத விடயம் தொடர்பில் தொடராகப் பல சந்திப்புக்கள் நடைபெற்றன. அவற்றின் முடிவில், காணி எனும் பொருள்பற்றி மீளவகுக்கப்பட்ட ஓர் ஆவணம் இலங்கை அரசினால் கூட்டணியிடம் கையளிக்கப்பட்டது.

இணக்கப் பேச்சுகள் பற்றியும், அரசாங்க பிரேரணைகள் மீதான சீர்திருத்தங்கள் பற்றியும் பூரண இரகசிய மனப்பான்மை கடைப்பிடிப்போம் என கூட்டணியும் இலங்கை அரசும் தம்முள் உடன்பட்டுக் கொண்டுள்ளன. இன்னுமொரு கேந்திர விடயத்திற்குத் தீர்வுகாணப்பட வேண்டி இருக்கிறது; ஐம்பெரும் தமிழர் விடுதலைப் போராளி இயக்கங்களையும் இணக்கஉரையாடல் மேசைக்கு இட்டுவரல் அவசியமாகும்; எப்படி, எப்பொழுது அவர்களை இட்டு வருவது என்பதே அக்கேந்திர விடயம். ஆனால் போராளிகளோ அவ்வளவாக அவசர' மனங்கொண்டவர்களாகத் தோன்றவில்லை. அரசினால் முன்வைக்கப்பட்ட பிரேரணைகளானவை பேச்சுவார்த்தைகளுக்கு வரப் போராளிகளைத் தூண்டும் அளவிற்குப் போதுமான ஓர் அடித்தளமாக அமையவில்லையே, என்கின்றனர் போராளிகள்.

ஏனென்றால், தமிழர் விடுதலைப் போராளிகளின் அடிப்படைக் கோட்பாடுகள் அல்லது தத்துவங்கள் நான்கு. இலங்கை அரசு அவற்றைக் கணித்தேற்றுக் கொள்ளும் என்பது போராளிகளின் எதிர்பார்ப்பு. ஆனால் அரசாங்கமோ கணிப்பு வழங்கும் நிலையை அணுகத் தானும் மனங் கொண்டிருப்பதாகக் கூறுவதற்கில்லையே, என்கின்றனர் அவர்கள்.

தமிழ் மக்கள் தனிவேறான ஒரு தேசிய இனம் என்பதற்கும், ஒரு தாயகத்திற்கும் சுய நிர்ணயத்திற்குமான அவர்களது உரிமைக்கும், மாத்திரம் கணிப்பு வழங்குவதோடு அமையாது, பெருந்தோட்டத் தமிழ் மக்கள் அனைவருக்கும் பிரஜாவுரிமை வழங்குதலும், அவர்களது ஜனநாயக உரிமைகளைத்திரும்பவும் அவர்களுக்கு வழங்குதலும் கூட இந்நான்கிலும் அடங்கும் என்பது போராளிகள் வலியுறுத்திநிற்கும் நிலைபாடு ஆகும்.

இனி, தமிழர் ஐக்கிய விடுதலைக் கூட்டணியானது இலங்கை அரசாங்கத்திற்கு ஒரு விடயத்தைச் சிபார்சு செய்துள்ளது. திம்பு மாநாட்டிற் செய்யப்பட்டதுபோல, தற்போதைய இணக்கக் கலந்துரையாடல்கள் முயற்சிகளில் போராளிகளும் பங்குபற்றுதல் வேண்டும் என்பதுதான் அவர்களுடைய சிபார்சு. அரசாங்கம் இம் மனப்பான்மையற்றதாகத் தோன்றவில்லை. அதாவது போராளிகளையும் இணக்க உரையாடல்களில் சேர்த்துக் கொள்ள இலங்கை அரசு விரும்புகிறதுபோலத் தெரிகிறது.

கொழும்பில் இணக்கப்பேச்சுக்களின் போக்கு எப்படி ஆயிற்று என சென்னை வட்டாரங்கள் தெரிவித்தவை வருமாறு: சந்திப்பில் இறங்கிய உடனேயே வளவளாப் பேச்சுக்களுக்கு இடம்கொடாது, தமிழர் ஐக்கிய விடுதலைக் கூட்டணியினர் விஷயததிற்கு வந்துவிட்டார்கள் முதலாவது சந்திப்பு நூற்று முப்பத்தைந்து நிமிடங்கள் நீடித்தது. ஆயினும், அங்கு அதிகமுன்னேற்றம் காணப்படவில்லை. இரு தரப்பினரும் நன்கு அறியப்பட்ட தத்தமது நிலைப்பாடுகளை எடுத்து இயம்பினர். அரசின் பிரேரணைகள் மீது கூட்டணி தனது கருத்துக்களை வெளியிட்டது. 1985, டிசெம்பர் மாதம் இநதிய அரசிற்குக் கூட்டணி தனது அபிப்பிராயங்களைத் தெரிவித்து இருந்தது அல்லவா? அவற்றைக் கருத்தில் வைத்தும் இச்சந்திப்பின்போது கூட்டணி விமர்சன உரைகள் வழங்கிறறு.

இம்முதற் சந்திப்பின்போது, அதாவது 1986, ஜூலை மாதம் பதின்மூன்றும் திகதியன்று, கொழும்பு, பண்டாரநாயக்கா நினைவுமண்டபத்தில் தொடங்கிய இப்பேச்சுக்களில் பங்குபற்றியோர் யாவர்?

தமிழர் தரப்பில் அ.அமிர்தலிங்கம் எம். சிவசிதம்பரம், ஆர். சம்பந்தன், வீ. யோகேஸ்வரன், வீ ஆனந்தசங்கரி, டாக்டர் நீலன் திருச்செல்வம், எஸ். சம்பந்தமூர்த்தி, எஸ். சூசைதாசன் ஆகியோர் பிரசன்னமாகி இருந்தனர். ஜனாதிபதி ஜெயவர்த்தன, தேசிய பாதுகாப்பு அமைச்சர் லலித் அத்துலத்முதலியின் துணையோடு இலங்கை அரசின்சார்பில் பங்குபற்றினர்.

'புரன்ட்லைன்' நிருபர் சென்னையில் வைத்து கொழும்பிலிருந்து மீண்ட அமிர்தலிங்கத்தைப் பேட்டிகண்டபோது 'தமிழ் மொழிப் பிராந்தியம் எனும் பதப் பிரயோகம்பற்றி வினா எழுப்பினர். இலங்கையில் தமிழரின் ஆதிக்கத்தின்கீழ் உள்ளவை வடக்கு, கிழக்கு மாகாணங்கள் ஆகும். இவற்றின் ஒருங்கிணைவு பற்றி ஏன் கூட்டணி தற்போது குறிப்பிடாதுவிட்டது எனக்கேட்கப்பட்டது. அத்துடன், தமிழர் தாயகம் என்ற கருத்தேற்பில் ஏதாவது அம்சங்கள் விட்டுக் கொடுக்கப்பட்டன என்பது அதன் அர்த்தமாகுமா? எனவும் வினா எழுந்தது. '1985, டிசம்பர் மாதம் நாம் டெல்லி அரசிற்குச் சமர்ப்பித்த பிரேரணைகளிற்கூட "தமிழ்மொழி அரசு" என்ற பதம் இடம் பெற்று இருந்தது. ஏனெனில், "இணைப்பு" அல்லது "ஒருங்கிணைவு" என்கின்றபோது வெவ்வேறான இரு அங்கங்களை அல்லது பாகங்களை ஒன்றுபடுத்த நாம் எத்தனிப்பது போன்ற

...5ம் பக்கம் பார்க்க

மகோற்சவ காலக் கட்டுரை

## சங்குவேலி ஸ்ரீ சிவஞானப்பிள்ளையார்

ஓம்'' எனும் பிரணவ வடிவினனான விநாயகப் பெருமான் கோவில் கொண்டெழுந்தருளியிருக்கும் திருத்தலங்களுள சங்குவேலியும் ஒன்றுகும். யாழ். வளங்கொழிக்கும விவசாய விளைநிலங்கள் நிறைந்த இக்கிராமத்தின் மத்தியில் ஸ்ரீ சிவஞானப்பிள்ளையார் ஆலயம் அமைந்துள்ளது.

இவ்வாலய வரலாறு, வணிகத்துறையிலே புகழ் பூத்துப் பெரும் பொருளீட்டியவரும், மட்டக்களப்பு வயித்திலிங்கம் என அன்புடன் அழைக்கப் பெற்றவருமான அமரர் ஸ்ரீ மானகாசிநாதர் வயித்திலிங்கம் அவர்களுடைய வாழ்வுடன் இணைந்ததாகும்.

இந்த ஆலயத்திருப்பணி முழுவதும் அமரர் அவர்களாலேயே நிறைவேற்றப்பட்டது எனவும், 1920ம ஆண்டில் மகாகும்பாபிஷேகம் நிறைவேறியது எனவும் அறிய முடிகின்றது. இது தொடர்பான கல்வெட்டு ஒன்று ஆலய மகாமண்டபத்தில பதிக்கப் பெற்றுள்ளதைக் காணலாம்.

இந்த ஆலய நிர்வாகம் அமரர் அவர்களால 1910ம் ஆண்டளவில் பொறுப்பேற்கப்பட முன்னர் இவ்விடத்தில் ஒரு சிறிய விநாயகர் ஆலயம அமைந்திருந்த தாகவும, அது யாழ். வண்ணைச் சிவன்கோவில் தர்மகர்த்தாக்களான செட்டிமார் பரம்பரையினரால் நிர்வகிக்கப்பட்டு வந்ததாகவும பொருளாதார நிலை காரணமாக அப்போதைய தர்மகர்த்தாவான கந்தர் கனகசபை அவர்களால, கையளிக்கப் பட்டதாகவும் அறியக் கிடக்கின்றது.

அந்தப் பழைய ஆலய மூல விக்கிரகம் இன்னும் இவ் வாலயத்திலே அமர்ந்திருத்தல் காணலாம். பழைய ஆலயத்திலே வருடாந்த உற்சவங்கள இடம்பெறவில்லையெனவும் விசேட உற்சவங்களாக திருவெம்பாவை, கந்தஷஷ்டி, சூரன்போர், சதுர்த்தி முதலியன இடம் பெற்றதாகவும் திருவெம்பாவை உற்சவத்தில் விநாயகப்பெருமான் சித்திரத் தேரில் உலா வந்ததாகவும் அறிய முடிவதுடன் அத் தேர் காலப்போக்கில சிதைவடையவும், அதன் நான்கு சில்லுகள் மட்டும் இன்றும் பாதுகாப்பாக உள்ளதைக் காணலாம். மேலும் பழைய வீதியில் அமைந்திருந்த தீர்த்தக் கேணி புதிய கோவில் அமைப்புக் காரணமாக மூடப்பெற்று, புதியதொரு தீர்த்தக் கேணி அமைக்கப் பெற்றதாகவும் அறிய முடிகின்றது.

இந்த ஆலயத் திருப்பணிகளை நிறைவேற்றிய அமரர் கா. வயித்திலிங்கம் அவர்கள் கப்பற் போக்குவரத்துத் துறையில் ஈடுபட்டிருந்தது டன், அவருடைய கப்பல்களில் ஒன்றுன ''தண்டாயுதபாணி'' யில் வைத்துப் பூஜிக்கப் பெற்ற, மரத்தினுலான தண்டாயுதபாணி விக்கிரகம் ஒன்று, இன்றும் இவ் வாலயத்தில் வைத்துப் பூஜிக்கப்படுவதையும், அதே கப்பலில் உபயோகிக்கப்பட்ட ஏணி ஒன்றும் இவ் வாலயத்தில் உள்ளதையும் காணலாம்.

நித்திய பூஜைகளுடன், விசேட உற்சவங்களாக கந்தஷஷ்டி, சூரன்போர், விநாயகர்கதை, திருவெம்பாவை, சதுர்த்தி முதலியனவும் அலங்கார உற்சவங்களும் 1963 வரை இடம் பெற்றதுடன் 1964 ல் முதன்முதலாக கொடியேற்றத்துடன் மகோற்சவங்கள் ஆரம்பிக்கப்பட்டு வருடா வருடம் சிறப்பாகநடைபெற்று வருகின்றன.

'வடமொழியும் தென்தமிழும் மறைகள் நான்கும் ஆனவன் காண்' என்ற தற்கமைய, 1918 ம் ஆண்டு தொடக்கம், வடமொழி விற்பன்னர் பிரம்மஸ்ரீ க. வைத்தீஸ்வரசாஸ்திரிகளைக் குருவாகக் கொண்டு, இவ்வாலயத்தின் அருகினிலே குருகுலம் ஒன்று நடாத்தப் பெற்று வந்ததாகவும், இதுவே பின்னர் சுப்பிரமணிய வித்தியாசாலையாக வளர்ச்சி பெற்றதென வும் அறிய முடிவதுடன், 1976 ல் இவ்வாலய புனராவர்த்தன மகாகும்பாபிஷேக குருவாக விளங்கிய கந்தரோடை க. சிவசுப்பிரமணியக் குருக்கள், திருநெல்வேலி சிவன் கோயில் ஆனந்த நடராசக் குருக்கள் ஆகியோர் மேற்படி குருகுலத்தில பயின்ற மாணுக்கருட் சிலராவர் என்பதும் நாம் அறியும் சிறப்புச் செய்தியாகும்.

இவ்வாலயத்தில் 1940 ஜூன் முதல் நித்திய நைமித்திய பூசைகளைச் சிறப்பாக நடாத்தி வருபவரும், மேற்படி சபாவின் போஷகருமான ஆலய பிரதமகுரு சிவஸ்ரீ வா. பாலசுப்பிரமணியக் குருக்கள் அவர்களுடைய அரும் பணி சிறப்பாகப் பாராட்டப்படவேண்டியதொன்றுகும். ஆவணிப் பூரணைத் திதியைத் தீர்த்த உற்சவமாகக் கொண்டு உற்சவங்கள் வகுக்கப் பெறுதலை வழமையாகக் கொண்ட இவ்வாலயத்தில் பத்து உற்சவங்கள் இடம்பெறுவதுடன், சென்ற 10 ம் திகதி ஞாயிற்றுக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமான இவ்வருட மகோற்சவம் முறையே 18 ம் திகதி திங்கள் தேர், 19 ம் திகதி தீர்த்தம், 20 ம் திகதி மணவாளக் கோல விழா (66 வருடாபிஷேகம்) என்பனவற்றுடன் இனிதே நிறைவெய்தும்.

❋ ப. மகேந்திரதாசன்

## நல்லூரிற் கந்தா தஞ்சம் எமக்கருள்வாய்

பஞ்சம் பசி நோயால் படைவீரர் கொடுமையினுல்
அஞ்சுகின்றேம் ஆறுமுகா! அசுரர்களை மாய்த்தவனே!
மஞ்சத்தில் ஏறிவரும் மயில்வாகனக் குமரா!
தஞ்சமென வந்தடைந்தோம் தாரணியில் அருள்வாயே!

''நீர்வை. பண்டிதர் முருகேசு''

❋ ❋ ❋

துள்ளுமயி லேறியுல கஞ்சுற்றி வந்தவா!
தெள்ளுதமி ழர்துயரம் நீயறிய வில்லையா?
வள்ளிதெய் வானையொடு மஞ்சமதில் ஏறி நீ
அள்ளியருள் பொலிகுவாய் அழகொழுகு முருகனே!

★ பரணி

# பாகிஸ்தானில் அனர்த்த விளைவுகள் அதிகரிப்பு!

(கராச்சி)

பாகிஸ்தானில் கலவரங்கள் பரவலாகி விஸ்வரூபமெடுத்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. சிந்து மாகாணத்திற்கும் கலவரம் வியாபித்துள்ளதாக அறிக்கைகள் மூலம் அறிய வருகிறது.

பல இடங்களில் பொலிசாருக்கும், செல்வி பெனுஸிர் பூட்டோவின் ஆதரவாளர்களுக்கும் இடையே கைகலப்புகள் இடம் பெற்றுள்ளன.

நூற்றுக்கணக்கான இளைஞர்கள் பொலிஸாரை நோக்கிக் கற்களை வீசி கலாட்டா புரிந்தனர்.

வீதிகளின் குறுக்கே இளைஞர் தடைகளையும் போட்டனர். பொலிஸார் நிலைமையைச் சமாளிக்கக் கண்ணீர்ப் புகைப் பிரயோகம் செய்ததுடன் துப்பாக்கிப் பிரயோகமும் மேற்கொண்டனர்.

இதனுல் இருவர் கொல்லப்படனர் சிந்து மாகாணத்தின் நாற்பது நகரங்கள் பாதிப்படைந்தன.

நாடு தழுவிய இயக்கம் நடத்தித் தம் எதிர்ப்பைக் காட்டவும் எதிர்க்கட்சிகள் முற்பட்டுள்ளன.

### கடத்தல் முறியடிப்பு

(சென்னை)

நான்கு இலட்சத்து ஐம்பத்து இரண்டாயிரம் ரூபா பெறுமதி மிக்க கடத்தல் பொருட்களைத் தமிழக சுங்க இலாகா அதிகாரிகள் கைப்பற்றியுள்ளனர்.

இவற்றில் தங்கக் கட்டிகளும் உள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டது.

### எம். ஜி. சக்கரபாணி காலமானுர்

(சென்னை)

தமிழகத்தின் பழம்பெரும் நடிகரும், தயாரிப்பாளரும் முதலமைச்சர் திரு. எம். ஜி. இராமச்சந்திரனின் மூத்த சகோதரருமான திரு. எம் ஜி. சக்கரபாணி நேற்று முன்தினம் சென்னையில் காலமானுர். அவருக்கு வயது 76. நீண்ட காலம் அவர் சுகவீனமுற்றிருந்தார்.

### சிங்கப்பூர் பிரதமர் உரை

(சிங்கப்பூர்)

''சிங்கப்பூர் மக்களின் தனிப்பட்ட வாழ்க்கையில் தலையிடுகின்றேனு? அபாண்டமான குற்றச்சாட்டு இது'' என்று சிங்கப்பூர் பிரதம மந்திரி திரு. லி- குவான்- யு கூறியுள்ளார்.

பொது வைபவம் ஒன்றில் இரண்டு மணித்தியாலங்கள் சொற்பொழிவாற்றிய அவர், நாட்டின் ஐக்கியம் வலுப்பட வேண்டும் என்று வற்புறுத்தினுர்.

பல்வேறு இன மக்களும் இதைக் கருத்திற் கொள்ள வேண்டும்' எனக் கூறிய அவர், மேற்கத்தைய நாடுகளின் நாகரிகம் இங்கு ஊடுருவ இடமளிக்கக் கூடாது' என எச்சரித்தார்.

அரசகரும மொழியாக ஆங்கிலமே இருக்கும் என்றும் அவர் உறுதியளித்தார்.

### தமிழக விஜயம்

(சென்னை)

சோவியத் யூனியனின் இணை ஜனுதிபதி திரு. தக்லிவ் தற்போது தமிழக விஜயம் மேற்கொண்டுள்ளார்.

அவரை விமான நிலையத்தில் அமைச்சர்கள் திரு கே. ராஜாராம் ஹண்டே, சபாநாயகர் திரு. பி. எஸ். பாண்டியன் முதலானேர் வரவேற்றனர்.

### வடக்கும் கிழக்கும் ...

-4-ஆம் பக்கத் தொடர்

ஓர் எண்ணம் உண்டாகலாம் அதனைத் தவிர்த்தற்காகவே, நாம் நெடுகிலும் மேற்கொண்டு வந்த நிலைப்பாடு, தமிழர் தாயகம் ஒன்றே ஒன்றுதான் என்பதாகும்' இவ்வாறு விளக்கம் அளித்தார், அமிர்தலிங்கம்.

(தொடரும்)

யாழ்நகரில்
மீண்டும் எமது சேவை

வெளிநாட்டு தொலைபேசி அழைப்புகள் மட்டுமல்ல
வெளிநாட்டிலிருந்து உங்களுக்கு வரும்
தொலைபேசி அழைப்புக்களையும் கூட
நீங்கள் உடன் பெற்றுக் கொள்ளலாம்

o அதற்கு வசதியாக காலை 8 மணி முதல் மாலை 6 மணி வரை கொழும்பு -யாழ்ப்பாணம் நேரடித் தொலைத் தொடர்பு எந்நேரமும் தயாராக இருக்கிறது.
o வெளிநாட்டில் இருக்கும் உங்கள் உறவினர்கள் கொழும்பு தொலைபேசி இலக்கம் 573594 ஊடாக எமது யாழ்ப்பாண தொலைபேசி இல, 23875 அல்லது 22784 உடன் நேரடியாகத் தொடர்பு கொள்ளலாம்.
o இதேபோல எமது கொழும்பு ரெலக்ஸ் (Telex) இல, 22287 மூலம் எமது யாழ்நகர் அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளலாம்.

இது தவிர,
பாஸ்போட் — புதிதாகப்பெற — புதுப்பிக்க
விஸா — சர்வதேச சாரதி லைசென்ஸ்
விமான டிக்கெட்டுக்கள் ஆகியவற்றைப் பெற்றுக் கொள்ள

Greenfield Travel Operators
No. 26, Model Market (upstairs), JAFFNA
Telephone; 23875 & 22784 Telex No:22287
R/25312

உங்கள் வருமானத்தைப் பெருக்கிக் கொள்ளவும், செலவினங்களைச் சுருக்கி உற்பத்தியைப் பெருக்கிக் கொள்ளவும் திட்டமிட்டு செயல்படுவது அவசியம்.

★ திட்ட ஆலோசனைகள்
★ நிபுணத்துவ சேவைகள்
★ நிதி வசதிகள்

அபிவிருத்தி நிதியம்

❋ சேமிப்பு
(உயர்ந்த பாதுகாப்புடன், மகிழ்ச்சிகரமான வட்டியுடன் எதிர்கால வளம்பெறும் ஆலோசனைகள்)
❋ அபிவிருத்திக் கடன்
(நியாயமான வட்டியுடன் இலகு தவணையில்)
❋ சீட்டு
(மக்களின் இடர்பாடுகளை நீக்கிய புது வடிவங்களில்)
❋ காசோலை மாற்றல்
உள்நாட்டுக் காசோலை மாற்றல் தொழிற்பாட்டிலுள்ள சகல இடர்பாடுகளும் தீரக்கூடியதாக)

பணத்திற்கு உன்னதமான பாதுகாப்புடன்
ஆக்கபூர்வமான ஆலோசனைகள்.........
இன்ன பிற.........

தொடர்பு கொள்க:
அபிவிருத்தி நிதியம்
337, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
(கன்னுதிட்டி)

எம்மவர்களின் பொருளாதார அபிவிருத்திக்கான இடர் தீர

அபிவிருத்தி நிதியம்

18-08- 6 முதல்
தனது சேவையைத் தொடங்குகிறது.
B/1468

19-8-86 செவ்வாய்க்கிழமை

ஈழமுரசு

## மருந்துக்களவு ஊழியர் இருவர் ஆஸ்பத்திரிநிர்வாக விசாரணையில்

யாழ். ஆஸ்பத்திரியில் இடம்பெற்ற மருந்துக்களவு தொடர்பாக விசாரணைக்கு உள்ளாகியிருந்த ஆஸ்பத்திரி ஊழியர்கள் இருவரும் நேற்று வைத்தியசாலை நிர்வாகத்திடம் ஒப்படைக்கப்பட்டதாக அறியப்படுகின்றது இவர்கள் மீதான குற்றச்சாட்டுகள் குறித்து நிர்வாகரீதியிலான விசாரணைகள் தற்பொழுது ஆரம்பிக்கப்பட்டுள்ளன. ஆஸ்பத்திரி மருந்துகள் களவாடப்பட்டு தனியார் மருந்து விற்பனை நிலையங்களுக்கு விற்கப்பட்டதாகவும் தெரியவந்துள்ளது.

★ பீரங்கிக் கப்பல் மூலம் வருகை

# வல்வைக்கு புது ராணுவக் குழு

# நவீன ஆயுதங்களும் வந்தன!

(வல்வெட்டித்துறை)

நேற்றுக்காலையில் இரண்டு ரோந்து பீரங்கி விசைப்படகுகள் பாதுகாப்புக்காக முன்னும் பின்னுமாக வர ஒரு பாரிய நீளமான பீரங்கிக் கப்பல் வல்வை இராணுவ முகாமுக்கு நேராக உயரக்கடலில் நங்கூரமிட்டது.

இக் கப்பலிலிருந்து பல இராணுவத்தினரும், பெட்டிகளும், பொதிகளும் ஆயுதங்களும் சிறிய பிளாஸ்ரிக் படகுகளில் இறக்கப்பட்டு விசைப்படகு காவலுக்கு வர வல்வை இராணுவ முகாம் கரைக்கு வந்து இறக்கப்பட்டன. பல தடவைகள் கரைக்கு வந்து சென்ற படகுகளிலிருந்து மேலதிகமாக இராணுவத்தினர் இறக்கப்பட்டுளளனர்.

நேற்று முன்தினம் வல்வை இராணுவத்தினருக்கும் – விடுதலைப் புலிகளுக்குமிடையில் நடந்த நேரடி மோதலின் போது, புலிகளினல் ஏவப்பட்ட இரண்டு ஷெல்கள் இராணுவ முகாமுக்குள் விழுந்து வெடித்ததில் முகாமுக்குள் இரண்டு கட்டடங்கள் பலத்த சேதத்துக்குள்ளானதாகவும், பல இராணுவத்தினர் பலியாகியோ, பாதிப்படைந்தோ இருக்கலாம் என விடுதலைப்புலிகள் தெரிவித்தனர்.

இதன் விளைவாகவே மேலதிக இராணுவத்தினர், ஆயுதங்கள், உணவுப் பொருட்கள் கொண்டுவந்து காலையில் இறக்கப்படுகின்றன. பலரை தூக்கி கப்பலில் ஏற்றப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. ஆகவே வல்வை இராணுவ முகாமில் பலத்த சேதம் ஏற்பட்டிருக்கலாம் என எண்ணத்தோன்றுகிறது.

நண்பகல் வரை கப்பலிலிருந்து இறக்கி ஏற்றும் பணி நடைபெற்றது.

## கிளிநொச்சி மக்களுக்கு இராணுவத்தின் "அறிவுரை"

(கிளிநொச்சி)

நேற்று முன்தினம் மாலை கிளிநொச்சி முகாமிலிருந்து 155ம் கட்டை மக்கள் குடியிருப்புப்பகுதிகளுக்குச் சென்ற இராணுவத்தினர் ஒலிபெருக்கி மூலம் மக்களுக்கு 'அறிவுரை' வழங்கினர்.

ஏழைமக்கள் உணவுக்கு இங்கு மிகவும் கஷ்டப்படுவதாகவும், ஏதும் கஷ்டமெனில் தங்களிடம் வந்து உதவிபெறலாம் எனவும், வைத்தியவசதியின்றி சிரமப்படும் மக்களுக்கு தாம் வைத்திய வசதிகள் செய்து கொடுக்கத்தயாராக இருப்பதாகவும் ஒலிபெருக்கி மூலம் கூறினராம்.

வாகனங்களிலும், நடைபவனியாகவும் இருபகுதியினராகச் சென்றபடையினர், திரும்பி வருகையில் உதயநகர் ஊடாக வந்து கனபுரம் வீதி வழியாக முகாமுக்குத்திரும்பினர். இதனல், கனகபுரம், ஜெயந்திநகர் பகுதிகளில் பதற்றம் நிலவியது.

## நெடுந்தீவுக் குதிரைக்கு ராணுவமுகாமில் உணவில்லை

## திருப்பி அனுப்ப முடிவு

நெடுந்தீவிலிருந்து நயினதீவு முகாமுக்கு பல சிரமங்களின் மத்தியில் எடுத்துச் செல்லப்படட குதிரை மீண்டும் நெடுந்தீவுக்கே திருப்பி அனுப்பபபடவேண்டிய நிலையுருவாகியுள்ளதாம்.

இந்தக் குதிரைக்கு தினமும் முகாமில பாணும், பால் மாவகைகளும் உணவாக வழங்கபபட்டதாகவும், உவர் நீரையும் கோரைப் புல்லையும் உண்டு பழகிய இக்குதிரை அவற்றை உண்ண மறுத்து வந்ததாகவும் தெரியவருகின்றது.

அத்துடன் அக்குதிரையை ஆர்வத்துடன் வளர்த்து வந்தவர்கள் தற்பொழுது வேறு முகாம்களுக்கு இடமாற்றம் பெற்றுச் சென்று விட்டதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இதன் காரணமாகவே மேற்படி குதிரையை மீண்டும் நெடுந்தீவுக்கே அனுப்பவேண்டிய நிலை முகாமிலுள்ளவர்களுக்கு ஏற்பட்டுள்ளதாம்.

இந்த குதிரை விவகாரம் பற்றிய செய்தி முன்னர் பத்திரிகைகளில் வெளியானதையடுத்து கோபமடைந்த குறித்த முகாமின் படையினர், அச்செய்தியை அனுப்பிய நிருபரைத்தேடி படகுப் பயணிகளை கடந்த சில நாட்களாக தொந்தரவு செய்து வந்தமை தெரிந்ததே.

### 14 தமிழர்

வல்வெட்டித்துறை தி. க. சிறீதர், வல்வெட்டித்துறை ப. ரவீந்திரன் வலவெட்டித்துறை க. ஜெயந்திரா, ஆனைக்கோட்டை செல்வி. ப. கீதாஞ்சலி, நெல்லியடி த. சசிதரன, பருத்தித்துறை தே. மோசிகீரன், பருத்தித்துறை செல்வி நகுலேஸ்வரி, சாவகச்சேரி எம். உதயகுமார், இணுவில சி. சிறீதரன், கொழும்பு இ. இமானுவேல், திருநெலவேலி வி. சிவகுமார், யாழ்ப்பாணம் எம். விக்னேஸ்வரன், அனுராதபுரம் ஹமீட்.

மின்துறை பொறியியலாளராக காங்கேசன்துறையைச் சேர்ந்த இளங்கோ முதலாம் வகுபபில் சித்தியடைந்துள்ளார்.

மெக்கானிக்கல் இன்ஜினியரிங்கில் கொழும்பைச் சேர்ந்த லோகிதரும், புறடக்ஷன் இன்ஜினியரிங்கில் திருமலையைச் சேர்ந்த ஹில்மியும் சித்தியடைந்துள்ளனர்.

### ராணுவம்...

தாக்குதல்களையும் மாடி வீட்டிலிருந்து துப்பாக்கி வேட்டுக்களையும் இராணுவத்தினர் தீர்த்தனர்.

பின்னர் பலத்த பாதுகாப்புகளின் மத்தியில் விடுதலைப் புலிகளினல் அவரது சடலம் எடுக்கப்பட்டு பெற்றோரிடம் ஒப்படைக்கப்படடது. இறந்த சுந்தரராஜன் திருமணமாணவர். வெளிநாட்டுக் கப்பலில் மாலுமியாக பணிபுரிபவர். கொழும்புக்கு புறப்படுவதற்காக, ஆலய தரிசனத்தை முடித்துக் கொண்டு வரும்பொழுது வழியில் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி மரணமானுர் என்பது குறிப்பிடத்தக்கது. காயமடைந்த சின்னவன் ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்டார்.

### கூட்டணி...

காலை பத்து மணியளவில் விசேட விமானத்தில் திருமலை வந்தடைந்த இம் மூன்று கூட்டணிப் பிரமுகர்களும் மரணச் சடங்கில்கலந்து கொண்ட பின்னர் உடனடியாகவே கொழும்பு திரும்பினர்கள். மரண ஊர்வலத்திற்கும் பலத்த பாதுகாப்பு வழங்கப்பட்டது.

## நீர்வேலி வீட்டில் கொள்ளை

(நீர்வேலி)

நீர்வேலி மாசிவன் சந்திக்கருகேயுள்ள வீடொன்றிலிருந்து பொருட்கள் ஆயுதந்தாங்கிய கொள்ளைக் கோஷ்டி ஒன்றினல் கொள்ளையடித்துச் செல்லப்பட்டுள்ளது.

எனினும் வீட்டிலுள்ளவர்கள் சத்தமிட்டதால் அயலவர்கள் ஓடிவரவே கொள்ளையர்கள் அகப்பட்ட இரு சங்கிலிகள், தோடுகள், வீடியோபடகசட்டுகள் ஆகியவற்றுடன் தப்பியோடிவிட்டனர்.

கொள்ளையர்கள் வந்த ஈ.எல்.எப். வானும், அவர்கள் கைவிட்டுச் சென்ற போலிக் கைத்துப்பாக்கிகள், செருப்புக்கள் என்பன விடுதலை இயக்கம் ஒன்றினல் கைப்பற்றப்பட்டன.

## பல்கலைக்கழக பரீட்சைகள் பத்து நாட்கள் ஒத்திவைப்பு

யாழ். பல்கலைக்கழகத்தில் நடாத்தப்படவிருந்த சகல பரீட்சைகளையும் பத்து தினங்கள் பிற்போடுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. நேற்று பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற செனட்சபைக் கூட்டத்திலேயே இந்த முடிவு எடுக்கப்பட்டது

மாணவர்களின் கோரிக்கையைஅடுத்தே சகல பரீட்சைகளையும் பத்துத் தினங்களால் பிற்போடுவதற்கு செனட்சபை தீர்மானித்தது. எனினும் பரீட்சைக்கு ஆயத்தம் பண்ணுவதற்கு இந்த பத்து தினங்கள் அவகாசம் போதாதென மாணவர் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாகவும் அறியப்பட்டுள்ளது

### காவலூரில்...

டர் ஒன்று இயந்திரத் துப்பாக்கியால் சுட்டுக்கொண்டு சென்றது.

நேற்று நயினதீவுநாகபூஷணி அம்மன் ஆலயத்தில் ரதோற்சவம் நடைபெற்றது குறிப்பிடத்தக்கது.

### யாழ். ஆஸ்பத்திரி...

வெளி நோயாளர் பகுதியிலுள்ள ஊசிபோடும் இடத்திற்கு சென்றசமயம் தாலியின் சுரை கழன்றதினல் அதனை கழுத்திலிருந்து கழற்றி கையில் இருந்த பாக்கினுள் வைத்திருந்தார்.

இதனை அவதானித்துக் கொண்டு அப்பகுதியில் நின்ற ஒருவர் திடீரென பெண்ணின் கையிலிருந்த பாக்கை பறித்துக்கொண்டு ஓடியதாக தெரிவிக்கப்படுகின்றது. பாக்கினுள் அச்சமயம் தாலிக்கொலியுடன் உடுபுடவைகள் சிலவும் இருந்தனவாம். இச்சம்பவம் குறித்து இளைஞர்கள் விசாரணை செய்வதாகவும் அறியப்படுகின்றது.

நல்லூரில்

## இன்று மஞ்சமும் தெய்வீகத் தமிழிசையும்

இன்று நல்லூர்க்கந்தசுவாமி கோவில் மஞ்சத் திருவிழாவாகும். மாலை ஐந்து மணிக்கு சுவாமி மஞ்சத்தில் வீதிஉலா வருவார். இதனை முன்னிட்டு நல்லூர் வீதியில் அமைந்துள்ள நாவலர் மணிமண்டப வளவில் மாலை ஆறரை மணிக்கு பண்ணிசைச் செல்வர் வே. சிவஞானம் அவர்களின் தெய்வீகத் தமிழிசை நிகழ்ச்சி நடைபெறும். 'ரெலிகுளோப்' நிறுவனம் இதனை ஒழுங்கு செய்துள்ளது.

### மினி சினிமா...

பெறவிருக்கும் கூட்டத்திற்குச் சமுகமளிக்குமாறு மேற்படி முன்னணி கேட்டுக்கொண்டுள்ளது.

கூட்டம் நடைபெறும் இடம் தமது பிரதிநிதிகள் மூலம் சகல மினி சினிமா உரிமையாளர்களுக்கு அறிவிக்கப்படுமெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## நோன்மதிக் கருத்தரங்கு

இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்க யாழ். கிளையின் இன்றைய நோன்மதிக் கருத்தரங்கில் "புதிய பிரக்ஞைகளும் சாந்தனது புனைகதைகளும்" என்ற பொருளில் பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் இரா. சிவச்சந்திரன், பி சிவநாதன் ஆகியோர் உரையாற்றுவர். பேராசிரியர் நந்தி தலைமையில் இலங்கை ஆசிரியர் சங்க கட்டத்தில் இன்று காலை பத்து மணிக்கு இது நடைபெறும்.

## சட்டத்தரணிகள் விசேட கூட்டம்

யாழ். சட்டத்தணிரகள் சங்கத்தின் விசேட கூட்டமொன்று நாளை நண்பகல் பன்னிரெண்டு மணிக்கு யாழ். சட்ட நூலகத்தில் நடைபெறும்.

## ஆதீனத்தில் இன்று

ஆத்மஜோதி நா. முத்தையா இன்று மாலை மூன்று மணிக்கு நல்லை ஆதீனத்தில் "ஈழத்துச் சித்தர்கள்" என்ற தலைப்பில் சொற்பொழிவாற்றுவார்.

## திருத்தம்

(வேலணை)

வேலணை அரசினர் கிராமிய மருத்துவமனையின் பழுதடைந்து பாவனைக்கு உதவாத மின் உபகரணங்கள், மின் விளக்குகள் யாவும் வேலணை இலங்கை மின்சார சபை டிப்போவினரால் திருத்தம் செய்யப்பட்டுளது.

தற்போது மேற்படி ஆஸ்பத்திரி ஒளி வெள்ளமாக காட்சி தருகிறது

மேற்படி உபகரணங்களை உடனடியாக திருத்தம் செய்தமைக்காக வேலணை இ. மி சபை டிபோவினரை ஆஸ்பத்திரி அபிவிருத்திச்சபை செயலாளர் திரு. இ. சற்குணநாதன் பாராட்டியுள்ளார்.

"ஈழமுரசு" சாயிபாபா அட்வர்டைசிங் அசோஸியேற்ஸ் ஸ்தாபனத்தாரால் 140, நாவலர் வீதி, யாழ்ப்பாணத்திலுள்ள அவர்களது அச்சகப் பகுதியில் 19-8-1986 செவ்வாய்க்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது. தொலைபேசி: 22437